
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 2 ஜனவரி 1989 இதழ் 1

பரிசுத்த



வேதாகமம்

வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க் கண்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி ஈரோடு 638 002.

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00—காலை ஆராதனை

,, : ,, 11-00—12-00—ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8.30 —மாலை ஆராதனை

செவ்வாய் : மாலை 7-15—8-30 —ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)

புதன் : மாலை 5-30—7-00 —சகோதரிகள் ஐக்கியக் கூட்டம் (ஒருவாரம்விட்டு ஒரு வாரம்)

வியாழன் : மாலை 7-15—8-30 —வேதாகம ஆய்வு

சனி : மாலை 7-00—9-00—மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


| | |
|---|---|
| முயற்சியின் சிகரம் | 1 |
| உங்களுடைய ருசி எப்படிப்பட்டது ? | 5 |
| அப்பொல்லோ-ஓர் சிறந்த முன்மாதிரி | 10 |
| கேள்வி-பதில் | 12 |
| கிறிஸ்தவனு, அவன் யார்? | 15 |
| சங்கீதம்-ஓர் கண்ணோட்டம் | 20 |

# THIRUMARAI AASAAN

Editor :
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J. C. CHOATE

**Published by Church of Christ**
**2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India**

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 2 January 1989 Issue 1

*ஆசிரியவுரை*

# முயற்சியின் சிகரம்

ஒரு காலத்தில் தரம், ஒழுக்கம், நேர்மை ஆகிய நற்பண்புகளுக்கு ரொம்ப மரியாதை கொடுக்கப்பட்டு வந்தது. ஆனால் இப்பொழுது எப்படிக் குறுகிய காலத்தில் பணம் சம்பாதிப்பது, மார்க்கெட் பிடிப்பது என்பதில் மக்கள் அதிகக் குறியாக இருக்கிறார்கள். ஏதோ ஒரு சிலர் தான் தரம் ஒழுக்கம், நீதி, நேர்மை என்றெல்லாம் விடாப்பிடியாக இருக்கிறார்கள்.

இந்த மனோநிலை மார்க்கத்தையும் விட்டு வைக்கவில்லை, எதிலும் விளம்பரமோகம், பேர், புகழ், மனிதர்கள் பாராட்டினால் போதும் கடவுள் என்ன நினைக்கிறார் என்பதைப் பற்றிக் கவலையில்லை என்கிற எண்ணம் வளர்ந்து பெருகி வருகிறதைப் பார்க்கிறோம். இந்த இழிநிலை வருந்தத் தக்கது; தீமை பயப்பது, வெறுக்கத்தக்கது. இதைக் குறித்துக் கிறிஸ்தவ மக்கள், சான்றோர்கள் அதிக ஆழமாகச் சிந்தித்து இவை வளராமல் தடுக்க முற்படவேண்டும்.

நல்ல இயல்புகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி வேதாகமம் குறிப்பாக புதிய ஏற்பாடு, வாழ்க்கைக்குத் தேவையான மற்றெல்லா விஷயங்களுக்கும் ஆலோசனைகள் நல்கி அறிவுரை வழங்கு-வதைப்போலவே இந்த விஷயத்துக்கும் நமக்கு வழிகாட்டுகிறது. நமக்கெல்லாம் நன்கு அறிமுகமாயிருக்கிற அப்போஸ்தலனுடைய வாழ்க்கையில் எவ்வாறு இந்த உன்னத மாண்பு இடம் பெற்றிருந்தது என்று கவனிப்போம்.

அவர் யூத மார்க்கத்தில் இருந்த பொழுது என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும், யூத மார்க்கத்தில் தேறினவனும் என் பிதாக்களுடைய பாரம்பரிய, நியாயங்களுக்காக மிகவும் பக்தி வைராக்கியம் உள்ளவனாக இருந்தேன்' (கலா 1:14) என்கிறார். பின்னர் கிறிஸ்து இயேசுவினால் பிடிக்கப்பட்டு அப்போஸ்தலனாகிய மாறினபிறகு அதே வைராக்கியத்தைக் கிறிஸ்துவின் பணியிலும் தொடர்து காட்டி தனக்கு முன்பிருந்த அப்போஸ்தலர்களையெல்லாம் மிஞ்சி நிற்கிறார் ''...அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய் பிரயாசப் பட்டேன், ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது'' என்று அவருடைய ஊழியத்தின் பிரயாசைகளைப் பற்றியும் (1 கொரி 15:10.) அவர்கள்மேல் வைத்த அன்பின் மிகுதியைப் பற்றியும் (2 கொரி 2:4) சபைகளுக்காக பாடு பட்டதைப் பற்றியும் (2 கொரி 11:23-28), அவருடைய எழுத்துக்கள் முயற்சியின் சிகரத்தைச் சுட்டுவதாகவே இருப்பதைக் கவனித்துப் பாருங்கள். இவைகளைச் சொல்லி அவர் பெருமை பட்டுக் கொள்ளாமல் நாமும் கூட நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியத்தையும் நம்மால் இயன்ற மட்டும் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று உற்சாக மூட்டுவதற்காக எழுதுகிறார் என்று கொள்ளவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் இந்த முயற்சியின் சிகரம் என்னும் உன்னத நிலையை அடைவதைப் பற்றி இன்னும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசுகிறார். உரோமாபுரியிலுள்ள திருச்சபை நம்பிக்கையில் பெருக வேண்டும் என்று ஜெபிக்கிறார் (ரோமர் 15:13) கொரிந்து பட்டணத்துத் திருச்சபைக்கு மற்ற விஷயங்களில் தேறியிருக்கிறது போல தர்ம காரியத்திலும் பெருக வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் (2 கொரி 8:7.) ...உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், சிறந்த பண்புகள் எல்லாவற்றைப்பற்றியும் சிந்தித்துக் கொண்டிருங்கள் என்று புத்திமதி கூறுகிறார் (பிலி 1:9; 4:8.) கொலோசே பட்டணத்துத் திருச்சபைக்கு விசுவாசத்திலே உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுவீர்களாக என்கிறார் (கொலே 2:7) மேலும் தெசலோனிக்கே திருச்சபைக்கு இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும், நற்காரியங்களில் தேறவேண்டும் என்றும், சகோதர அன்பில் பெருக வேண்டும் என்றும் புத்திமதி கூறுகிறார் (தெச 4:1, 10.)

இப்படி ஏறக்குறைய தாம் அறிந்த மக்கள் யாவரும் முயற்சியின் சிகரத்தை எட்டவேண்டும் என்ற கருத்தை அப்போஸ்தலன் மட்டுமே வலியுறுத்துகிறார் என்று எண்ணி ஒதுங்கி விடக்கூடாது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் இந்த உன்னத நிலை அடைவதைப் பற்றி மௌனமாயிருக்கவில்லை. 'உங்கள் நீதி வேதபாரகர் பரிசேயர் நீதியைக் காட்டிலும் அதிகமாயிராவிட்டால் பரலோக இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்க முடியாது என்றும், பரலோகத்திலிருக்கிற உங்கள்

பிதா பூரண சற்குணராயிருப்பது போல நீங்களும் பூரண சற்குண ராயிருக்கக் கடவீர்கள் என்றும் ஆலோசனை கூறுகிறார் மத் 5:20, 48. ஆக இயேசுகிறிஸ்து தம்மைப் பின்பற்றுபவர்கள், மற்றவர்களிலேயே சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அதைப் பின்பற்றி பவுல் அப்போஸ்தலனும் எதிர்ப்பார்க்கிறார். அப்படியானால் நாம் அதை அசட்டை செய்யக்கூடாது.

இவ்வாறாக நாம் முயற்சியின் உச்சநிலையை அடைய வேண்டும் என்று செயல்படும் போது ஏற்படும் விளைவுகள் யாவை? நாம் செய்கின்றன பணியில் சில உடனடி மாற்றங்கள் தென்படும். நம்முடைய பணிகள் நேர்த்தியாகவும் சரியாகவும் இருக்கவேண்டும் என்று எண்ணுவோம். அன்றன்றுள்ள பணிகளை அன்றன்று செய்து முடிக்க பிரயாசப்படுவோம். நாம் நம்முடைய காரியங்களை ஒழுங்காக-வும், பாங்காகவும் செய்ய முற்படும்பொழுது தேவன் கூட மகிமைப்-படுகிறார். ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்' என்றும் வார்த்தையினாலாவது, கிரியையினாலாவது நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர்முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரி-யுங்கள் என்றும்...எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக' என்றும் வாசிக்கிறோம் (1 கொரி10:31, 1 கொலே 3:17;1பேதுரு 4:11.)

நம்மால் அதிகமாகச் செய்ய முடிந்தும் குறைவாகச் செய்து விட்டு திருப்தியடைந்தவர்களாய்க் காணப்பட்டால், நாம் யாருக்காகப் பணி செய்கிறோமோ அவரை நாம் மதிக்கவில்லை அல்லது அன்புகூரவில்லை என்று நம்மைக் கவனிக்கிற மக்களுக்குத் தெரியாமற்போகாது. நாம் யாருக்காகப் பணி புரிகிறோமோ அவரின் எண்ணங்கள், சிந்தனைகளை, கொள்கைகளை நாம் உண்மையாகவே மதிக்கிறவர்களாயிருந்தால் நாம் நம்மால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறப்பாகச் செய்ய முயற்சிப்போம்.

நாம் முயற்சியின் உச்சிக்கு ஏறிப்போக வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படும்போது சில சங்கடமான உண்மைகள் நமக்குத் தெரியவரும். நாம் எவ்வளவு குறைவுள்ளவர்களாக இருக்கிறோம், தவறு செய்கிறவர்வளாக இருக்கிறோம் என்பதும், நாம் நினைக்கிறபடி நாம் ஒன்றும் அவ்வளவு சிறந்தவர்களல்ல என்கிற உண்மையும் தெளிவாகத் தெரியவரும். இந்த இடத்தில் 'நம்மால்'முடிந்த அளவு, என்பது பரிபூர்ணத்தைக் குறிக்காது என்பதை நினைவில் கொள்க. எவ்வளவு முடியுமோ அவ்வளவு சிறப்பாக என்றே பொருள்படும். ஒருவேளை நம்மால் முடிந்த அளவு சிறந்தது என்பது பரிபூர்ணத்தை விட மிக மிகக் குறைவாகக் கூட இருக்கலாம். ஆனால் அது ஆண்டவருக்குப் பிரியமானது. நம்மால் இயன்றதை வஞ்சகம் இல்லாமல் செய்து விட்டோம். அதுதான் தேவன் விரும்புவது. ஏழை விதவை

போட்ட காணிக்கையை இயேசு பாராட்டினதை நினைவில் கொள்ளுங்கள். இரண்டு பைசா என்பது செல்வந்தர்கள் போட்ட காணிக்கைகளை விட அதிகம் என்பதனால் அல்ல; தனக்கு இருக்கிற எல்லாவற்றையும் கொடுத்துவிட்டாள் என்பதே பாராட்டப்படுகிறது (மாற்கு 12:42-44.)

ஒரு காரியத்தை நினைவில் வையுங்கள், உங்கள் முயற்சியின் சிகரத்தை எட்ட நீங்கள் பாடுபடும்பொழுது உங்கள் திறமையின் தரம் நாளுக்குநாள் பட்டை தீட்டப்பட்ட வைரம்போல் பிரகாசம் அடைகிறது. உங்கள் ஆர்வம் புதிய புதிய எண்ணங்களைத் தோற்றுவித்து புதிய புதிய கோணங்களில் காரியங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

இப்படி நீங்கள் முயற்சியின் உச்சியை அடையப் பாடுபடுகிற போது சில எதிர்மறை விளைவுகளும் உண்டாகலாம். மேலும் மேலும் நீங்கள் உற்சாகமடையும்போது ஏற்படுகிற வேலைப்புளு அந்தவிதமான சிந்தை இல்லாத உங்கள் உடன் வேலையாட்களுக்கு தொய்வைக் கொடுக்கலாம். அவர்கள் தாங்கள் அடைந்த சாதனை போதும் என்று மெத்தனமாக இருப்பார்கள். அதனால் சில வேளைகளில் கருத்துவேறுபாடுகள் தோன்றி மெல்ல வாக்குவாதத்துக்கும், சச்சரவுக்கும் கூட இழுத்துச் சென்று விடும். பிரிந்து செயல்பட வேண்டிய சூழ்நிலைகள் கூட உருவாகலாம் (அப் 14:39-39.) அப்படிப்பட்ட வேளைகளில் நீங்கள் சோர்ந்துபோய் போதிய ஆதரவு இல்லையே என்று அவர்களுடைய இழுப்புக்கு உடன்பட்டு உங்கள் முயற்சியைத் தளர விட்டு விடாதீர்கள். பொறுமையாய் இருங்கள்; தைரியம் இழக்காமல் தனிமையாகவே செயல்படுங்கள். மற்றவர்களுக்கு முன்மாதிரியாகச் செயல்படுங்கள். வேதாகமத்தை எடுத்து குணக் குன்றுகளாகத் திகழ்ந்த சான்றோர்கள்விசுவாசிகள் ஆகியவர்களைப் பற்றி எடுத்துச் சொல்லுங்கள் ஒரு வேளை அது உடனடியாகப் பலன் தராமல் போகலாம், சிறுகச் சிறுக அது மற்றவர்களையும் ஆட்கொள்ளும் என்பதில் சந்தேகம் வேண்டாம்.

சபையில் செய்யப்படவேண்டிய பணிகள் அனைத்துமே விருப்பப்பட்டு செய்யப்படும் தன்ஆர்வப் பணிகளே. சிலபேர் இப்படி அப்படி போக்குக் காட்டி விட்டு ஓட்டம் பிடிப்பார்கள். இந்தப் பணிகளுக்கு கண்காணிகளும் மேஸ்திரிகளும், கிடையா. குறைவாகச் செய்கிறவர்களுக்கோ மோசமாகச் செய்கிறவர்களுக்கோ தண்டனை ஏதும் கொடுப்பாரில்லை. சம்பளப் பிடித்தமும் கிடையாது. ஆனால் தேவன் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவர் யாருக்கு எத்தனை தாலந்துகள் கொடுத்தோம் என்பதை மறந்துவிட மாட்டார்.

ஆகவே சகோதரர்களே! தாய்க்குலமே! மனுஷர் பார்க்கவேண்டும் என்று பார்வைக்கு ஊழியம் செய்யாமலும், 'கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்படுவான்' என்பன போன்ற அறிவுரைகளையும்எச்சரிப்புகளையும் மனதில் கொண்டு உங்களால் முடிந்த அளவு நம்முடைய வாழ்க்கையில் நற்பண்புகளைப் பெருக்கி தேவனுக்குப் பிரியமாய் நடக்க முயலுவோமாக!

E. Z. செல்வநாயகம்

# உங்களுடைய ருசி எப்படிப்பட்டது?

நம்மில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான உணவுப் பழக்கம் உண்டு. அதை மட்டுமே ஏற்றுக் கொள்வோம். மற்றவிதமான உணவுகளைப் பற்றி நாம் கண்டு கொள்ளவே மாட்டோம். சில வேளைகளில் சில உணவு வகைகளையோ, பழங்களையோ நாம் புசித்தே இருக்க மாட்டோம், ஆனால் அவைகள் மோசமானவைகள் என்று எவரோ சொன்னதை நம்பிக் கொண்டு அது எப்படித்தான் இருக்கும் ருசித்துப் பார்க்கலாமே என்று கூட சிந்திக்க மாட்டோம். இன்னும் சில வகை உணவுகளை ஆரம்பத்தில் அவ்வளவாய் விரும்பமாட்டோம். சாப்பிட்டுத் தான் ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் ஏற்றுக் கொள்வோம். ஆனால் பழகப் பழக அதன் ருசி நமக்கு மிகவும் பிடித்துப் போகும்.

ஒருவர் தன்னுடைய நண்பன் ஒருவரைக் குறிப்பிட்டு அவன் விலையுயர்ந்த ஆடைகள் அணியும் ருசியை வளர்த்துக் கொண்டான் என்று குறிப்பிடுவார். சிலருடைய வாழ்க்கையில் இளமைப் பருவத்தில் தனக்குக் கிட்டாத ஒரு சுகத்தை, ஆளான பிறகு ருசிக்கும் வாய்ப்புக் கிடைத்தால் நாம் இளமையில் இந்த சுகத்தையெல்லாம் அனுபவிக்க வில்லையே இப்பொழுது மட்டும் ஏன் என்று விட்டு விட மாட்டோம்.

உருசி என்பது இரு வகைப்படும், ஒன்று எழுத்தின் பிரகாரமாக ஒரு பொருளைப் ருசித்துப் பார்த்தல். அப்பொருளை மென்று அல்லது கடித்துச் சுவைப்பது: இன்னொன்று உருவகமாகக் கூறப்படுவது. அதாவது ஒருவனுக்கு விலையுயர்ந்த ஆடைகளை அணிந்து பார்க்கும் ருசி என்று சொல்லும் போது, ஒரு ஆணோ பெண்ணோ உடுக்கும் ஆடைகளின் மதிப்பையும் வர்ணத்தையும் வைத்து அப்படிச் சொல்லுகிறோம். அதே போல ஒரு புதிய பாணி சைக்கிள் வாங்குவதையோ, ஒரு குறிப்பிட்ட பள்ளியில் சேர்வதையோ கூட அப்படிக் குறிப்பிடுகிறோம்.

வேதம் கூட ருசியைப் பற்றிச் சொல்லுகிறது. பேதுரு ருசியைப் பற்றிக் குறிப்பிடும் போது, எப்படி ஒருவன் என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டு ஆத்துமாக்களை சுத்தமாக்கிக் கொண்டார்கள் என்று விளக்கி விட்டு (1பேது 1:22, 23) இரண்டாம் அதிகாரம் 1 முதல் 3 வசனங்களில் 'இப்படியிருக்க கர்த்தர் தயவுள்ளவர் என்பதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால் சகல துர்க்குணங்களையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்து விட்டு நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்-பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள்' என்கிறார்.

அதாவது, எப்போது ஒரு மனிதன் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டு அல்லது இரட்சிக்கப்பட்டுவிட்டால் அவன் சகல தீய பழக்கங்களையும், மாய்மாலத்தையும், பகை உணர்வு ஈறாக அனைத்துக் கெட்ட செய்கைகளையும் விட்டு விட வேண்டும். துர்க்குணம் என்பது ஒருவர் மீது பகைமை கொண்டு அல்லது ஒருவனை மோசமானவன் என்று எண்ணி அவனுக்குத் தீங்கு செய்யும் இயல்பு. கபடம் என்பது தந்திரமாக ஏமாற்றுவதாகும். மாய்மாலம் என்பது ஒருவகையான ஆதாயம் கருதி நாடகமாடுதல், பொறாமை என்பது மற்றவர்கள் வைத்திருக்கும் அல்லது பெற்றிருக்கும் அனைத்தும் தனக்கும் இருக்க வேண்டும் என்று எண்ணுகிற குணம். புறங் கூறுதல் என்பது ஒருவனைப் போக விட்டு பின்னாலே அவதூறாகப் பேசுவது. பேதுரு கொடுத்துள்ள இந்தப் பட்டியலில் உள்ள துர்க்குணங்களை விட்டு விடுவது எவருக்கும் நல்லது இல்லையா! ஆனால் ஒருவன் மறுபடியும் பிறந்திருந்தால் அல்லது இரட்சிக்கப்பட்டிருப்பது உண்மையானால் இந்த இழி குணங்களிலிருந்து மனந்திரும்பி இவைகளை தன் வாழ்க்கையிலிருந்து துரத்தி விடுவது அவசியம்.

மேலும் அவர், ஒருவன் மறுபடியும் பிறந்திருந்தால் அவன் ஒரு குழந்தையைப் போல் இருக்கிறான். அவன் அல்லது அவள் ஒருவேளை ஐம்பது வயது நிரம்பியவராகக் கூட இருக்கலாம், ஆனால் ஆவிக்குரிய விஷயத்தில் அவர்கள் குழந்தைகளே. ஆகையால் அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து புதியவர்களாகிறார்கள், பாவங்களைக் களைந்து போட்டு விட்ட அந்த மக்கள் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகிறார்கள். புதுப் பிறப்பு என்று கூறப்படும் அந்தப் பிறப்பைப் பற்றி யோவான் 3:3-5 விவரிக்கிறது. அதில் ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தவன் என்கிறார் இயேசு. இவைகளின் மூலம் பரிசுத்த ஆவியானவர் புதிய ஏற்பாட்டில் தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். ஒருவன் தேவனையும் கிறிஸ்துவையும் கேள்விப்பட்டு விசுவாசித்து, மனந் திரும்புதலுக்கேற்ற கிரியைகளை நடப்பித்து, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கை செய்து பாவ மன்னிப்புக்கென்று தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டால் மறு பிறப்படைகிறான் அல்லது இரட்சிக்கப்படுகிறான். நாம் இதைக் குறித்து யோவான் 14:1:3; ரோமர் 10:17; எபி 11:6; அப் 17-20; மத் 10:32; ரோமர் 6:3-4 மற்றும் அப் 2:38 ஆகிய வசனப்பகுதியில் வாசிக்கலாம், ஞானஸ்நானத்தில் அடக்கம் பண்ணப் படும் பொழுது அவன் புதிய பிறப்படைகிறான். ரோமர் 6:3,4; கொலே 2:12. மேலும் ஞானஸ்நானந்தின் போது ஒருவன் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கிறான். அதைப்பற்றிப் பவுல் கூறும் பொழுது ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புது சிருஷ்டியாக இருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின; எல்லாம் புதிதாயின'' 2 கொரி 5.17

மறுபடியும் பிறந்த ஒருவன் புது சிருஷ்டி அல்லது புதிதாகப் பிறந்த குழந்தையைப் போல் இருக்கிறபடியால் கிறிஸ்துவுக்குள் ஆரம்ப நிலையில் இருக்கிறான். அப்படியானால், அப்படிப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவின் எளிய போதனைகள் என்னும் களங்கமில்லாத ஞானப்பாலைப் புகட்டவேண்டும். மாறாக அப்படிப்பட்டவர்களுக்குக் கடினமான உபதேசங்கள் போதிக்கப்பட்டால் அதை அவர்களால் ஜீரணிக்க முடியாமல் கிறிஸ்துவை விட்டே ஓடிப்போக நேரிடும். கொஞ்சம் கொஞ்சமாக எளிய போதனைகளை உபதேசித்து அவர்கள் வளர்ச்சி அடைய உதவவேண்டும். பின்னர் காலம் செல்லச் செல்ல அவர்கள் பக்குவம் அடைந்து ஆழமான சத்தியங்கள் என்னும் கடின ஆகாரத்தை ஏற்றுக்கொள்ள முடியும்.

மேலும் பேதுரு கூறுவதைக் கவனியுங்கள். இப்படிப்பட்ட அனுபவத்துக்குள் ஒருவன் வரும்பொழுது, கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. அதாவது அவனுடைய விசுவாசம் உறுதிப்பட்டு வளர்ச்சியடைந்து அவனுடைய வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களைக் கவனிக்கும் நிலை உண்டாகிறது. கர்த்தர் தன்னுடைய வாழ்க்கையை எவ்வாறு ஆசீர்வதித்திருக்கிறார் என்று அறியும்போது அவன் மீண்டும் தன்னுடைய பழைய வாழ்க்கைக்குத் திரும்பிப்போக விரும்பமாட்டான்.

ருசித்துப் பார்ப்பதைப் பற்றி வேதாகமத்தில் இன்னும் சில இடங்களில் கூட வாசிக்கலாம். முதலாவதாக சங் 34:8-ல் 'கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள் அவன்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்' என்கிறார் தாவீது அரசன். அதன் சாரம் என்னவெனில், ஒருவன் கர்த்தர்மேல் நம்பிக்கையுள்ளவனாக இருந்தால் கர்த்தர் அவனுடைய வாழ்க்கையில் கிரியை நடப்பிக்கும்படி அவருக்கு ஒப்புக்கொடுத்தால் கர்த்தர் நல்லவர் என்பதை தன் சொந்த அனுபவத்தில் கண்டு கொள்ளமுடியும்.

ஒருவன் பாவம் நிறைந்த உலகில் வழிதப்பிப் பயங்கரமான சூழ்நிலையில் இருக்கும்போது, கர்த்தராகிய இயேசுவோடும் அவருடைய உபதேசத்தோடும் அவனுக்குத் தொடர்பு உண்டாகி, அவருக்குக் கீழ்படிந்து அவனுடைய வாழ்க்கை மாற்றப்பட்டு, மாற்றப்பட்ட வாழ்க்கையின் சுகத்தை அனுபவத்தில் பார்த்தபின் அவன் மறுபடியும் பழைய நரகலான வாழ்க்கைக்குத் திரும்புவது பற்றி யோசிப்பது எப்படி?

உலகமும் அதில் உள்ள யாவும், மனிதன் உள்பட, ஏதோ தற்செயலாய் உண்டாகிவிட்டது என்று சிலர் நம்பி அதை மற்றவர்களுக்கும் உபதேசித்துக் குழப்புகிறார்கள். இந்த பரிணாம வளர்ச்சிக் கொள்கையை பலர் உண்மை என்று ஏற்றுக்கொள்கின்றனர். அது தரும் விளக்கம் தான் என்ன? சிந்திக்கிற ஒருவர் ஒன்றுமில்லாததிலிருந்து

மற்ருென்று உண்டாவது இயலாத காரியம் என்றும், தேவனே உலகத்திலுள்ள அனைத்தையும் படைத்து பராமரிக்கிருர் என்ற உண்மையையும் அறிந்து கொள்வான். அதை ருசித்துப் பார்த்தவன் எப்படி வேறு விதமான கட்டுக் கதைகளை ஏற்றுக் கொள்ள முடியும்!

உலகத்தில் பல மதங்களும், பல சபைப் பிரிவுகளும் மலிந்து கிடக்கின்றன. அவைகள் எல்லாமே ஒன்றைப் போல மற்றவைகளும் நல்லவைகளே என்று மக்கள் பாமரத்தனமாக நம்பிக் கொண்டி-ருக்கின்றனர். கர்த்தர் எந்த சபைக்காக தன் ஜீவனையே கொடுத்தாரோ அந்தக் கிறிஸ்துவின் சபையைப் பற்றி சரியான தெளிவில்லாமல் இருக்கிருர்கள். தயவு செய்து கீழ் வரும் வசனங்களை வாசித்துத் தியானிக்கவும் (மத் 16:18; எபே 1:23 அப் 20:28) ஒருவன் இந்த வசனங்கள் வெளிப்படுத்தும் உண்மையை அறிந்து அவருடைய உபதேசச் சட்டங்களுக்கு மனப் பூர்வமாய்க் கீழ்ப்படிந்து புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தின் ருசியை அனுபவித்துப் பார்த்த பிறகு நிச்சயமாக மனிதர்களின் கற்பனையில் உதித்த எந்தக் கொள்கைகளையும் ஏற்கமாட்டான்,

சத்தியத்தைப் போன்று வேறு எதுவும் இருக்க முடியாது. கர்த்தருடைய வழியே சிறந்த வழி; ஒரே வழி, அதற்கு ஒப்புவமை கிடையாது, தேவனுடைய கிருபை, இரக்கம் அன்பு ஆகியவைகளோடு ஒப்பிட மனிதன் கண்டு பிடித்த எதுவும் நிற்காது. ஒருவன் மனிதரால் போதிக்கப்படுகிற சரீர ஆன்மீக சம்பந்தமான ஏதேதோ கொள்கை களில் சுய திருப்தி அடைந்தவர்களாக இருக்கலாம். ஆனுல் ஒருவன் கர்த்தருடைய வழியை ருசித்துப் பார்த்து விட்டால் பிறகு அவைகளை யெல்லாம் உதறித் தள்ளி விடுவான். ஏனெனில் எதுவும் அதற்கு நிகரில்லை.

பேதுரு கூறுகிற காரியத்தின் சுருக்கம் இதுதான். கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்த்து அவருடைய வழியே சிறந்தது-அவரால் கிடைக்கும் இரட்சிப்பு, நம்பிக்கை ஆகியவற்றிற்கு நிகரில்லை என்று அனுபவத்தில் கண்டு கொண்ட பிறகு அதை விட பல விதத்தி லும் குறைவான ஒன்றினை எப்படி ஏற்று, திருப்தியடையக் கூடும்!

இதைக்குறித்து எபிரேய நிருப ஆசிரியர் 'ஏனெனில் ஒரு தரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும் தேவனுடைய நல் வார்த்தையையும், இனி வரும்உலகத்தின் பலன்களையும் ருசிபார்த்தும் மறுதலித்துப் போனவர்கள் தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப் படுத்துகிறபடியால் மனந் திரும்புவதற்கு ஏதுவாக, அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம் எபி 6.4-6 என்கிருர். இவ் வசனப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள கருத்து என்னவெனில்,

ஒருமுறை கர்த்தர் தருகிற சுவுகளை ருசித்துப் பார்த்தவன் கர்த்தருடைய வழியை விட்டு மோசம் போய் கர்த்தரை மறுதலித்து, தான் இரட்சிப்படைவதற்குக் காரணமாயிருந்த அவருடைய தியாகத்தையும் அன்பையும் மறப்பானுனால் அவன் மீண்டும் இவ் வாழ்க்கையில் அவரிடத்தில் வர முடியாத ஆழத்திற்கு விழுந்து பழைய இழந்துபோன நிலைமைக்கே போய் விடுகிறுன். அவருடைய அன்பையும் இரக்கத்தையும் ருசித்துப் பார்த்த பிறகு வழி விலகிப் போவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத அவலநிலை. அவனுக்கு உரிய சரியான இடம் நித்திய நரகமே.

நண்பனே, சகோதரியே! கர்த்தர் ஓர் விருந்துக்கு உன்னை அழைக்கிறுர். விருந்தில் ஜீவ அப்பமும் ஜீவ தண்ணீரும் பரிமாறப்படும் யோவான் 6:35; 4:14 இயேசு சொன்னுர், தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினுலும் பிழைப்பான் (மத் 4:4) அவர் ஆயத்தம் செய்திருக்கிற விருந்துக்கு உன்னையும் அழைக்கிறுர். அவர் வழங்கும் உணவு இதுவரை நீ ருசி பார்த்த எந்த பண்டத்தைக் காட்டிலும் சிறந்த ருசியுள்ளது என்பதை வந்து ருசித்துப்பார்.

J. C. சோட்

## யாரை ஏமாற்றுகிருய்?

தேவனிடத்தில் அன்பு கூறுகிறேன் என்று ஒருவன் சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன். தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன் தான் காணுத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவான்?

தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்பு கூர வேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறுேம் யோவான் 4:19, 20.

அவரை (கிறிஸ்துவை) அறிந்திருக்கிறேனென்று சொல்லியும் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனுயிருக்கிறுன் அவனுக்குள் சத்தியமில்லை.

அவருக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும். 1யோவான் 2:4,6.

## எதிலும் அளவோடிரு

மிஞ்சின நீதிமானுயிராதே, உன்னை அதிக ஞானியுமாக்காதே; உன்னை நீ ஏன் கெடுத்துக்கொள்ள வேண்டும்.

மிஞ்சின துஷ்டனுயிராதே; அதிக பேதையாயுமிராதே. உன் காலத்துக்கு முன் நீ ஏன் சாகவேண்டும்?

# அப்பொல்லோ - ஓர் சிறந்த முன்மாதிரி

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அலெக்ஸாண்டிரியா என்ற பட்டணம் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. அந்நகரில் புகழ் பெற்ற ஒருபல்கலைக்கழகமும், உலகப் பிரசித்தி பெற்ற நூலகம் ஒன்றும் கூட இருந்ததாக வரலாறு கூறுகிறது. அப்படிப்பட்ட நகரில் பிறந்தவர் தான் அப்பொல்லோ. நடபடிகள் 18-ம் அதிகாரத்தில் அவரைப் பற்றி சில குறிப்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன: அவைகளைக் கவனித்து ஆய்வு செய்து கற்றுக்கொள்ள வேண்டிய அம்சங்கள் நிறைய உள்ளன. தற்காலத்து வேதாகம ஆசிரியர்களுக்கும் கிறிஸ்தவப் போதகர்களுக்கும் பயன்படும் என்ற எண்ணத்தில் அவைகளைக் கீழேதொகுத்துக் தருகிறோம்.

1. **சாதுரியவான் - வேதாகமத்தில் வல்லவன்:** யூத மார்க்கத்துக்கு பழைய ஏற்பாடே வேதம். அதாவது வாழ்க்கை நெறி. அவர் அதில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். ''சொல்லின் செல்வர்'' என்று வர்ணிக்கும் அளவுக்கு சொல்லாற்றல் உள்ளவர்.

2. **ஆவியில் அனலுள்ளவர்:** இங்கு ''அனல்'' என்று குறிப்பிடப் பட்டிருக்கும் தமிழ்ச் சொல்லுக்கு ''உற்சாகம் பொங்கி வழியும்'' எழுச்சி மிகுந்த ''என்று பொருள் கொள்ள வேண்டும். கிறிஸ்தவத்துக்கு கர்த்தருடைய மார்க்கம் என்று ஒரு பெயரும் உண்டு. (அப் 9:2;19:23;24:14) அதில் இவருக்கு யோவான் கொடுத்த ஞானஸ் நானம் வரையே தெரிந்திருந்து. தெரிந்ததை உற்சாகமாக மக்கள் மத்தியில் பிரகடனம் செய்து கொண்டு வந்தார்.

3. **தன் தவறுகள் சுட்டிக் காட்டப் பட்ட பொழுது திருத்திக் கொள்ளக் கூடிய ஆண்மையுள்ளவர்.**

ஏதோ காரணத்தினுல் அவருக்கு அந் நாட்களில் யூதர்களுக்குள்ளே பிரபலமாயிருந்த இயேசுவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் பற்றியோ, பெந்தேகோஸ்தே நாளில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள்பற்றியோ, சபை ஸ்தாபிக்கப்பட்ட காரியங்களைப் பற்றியோ தெரியாமல் இருந்தது. அவருடைய ஆற்றல் மிகுந்த பிரசங்கங்களைக் கேட்கும் வாய்ப்புப் பெற்ற ஆக்கில்லா - பிரிஸ்கில்லா தம்பதியினர் அவரைப் போல் பிரபலமானவர்கள் அல்லர். பட்டம் படிப்போ, பை நிறையப் பணமோ, செல்வாக்கோ இல்லாதவர்கள், வெறும் கூடாரத் தொழிலாளிகள் தான். ஆனுல் அப்போஸ்தலனுகிய பவுல் இவர்களுடன் சேர்ந்து தொழில் செய்த காலத்தில் அவரிடத்திலிருந்து தாங்கள் கற்றுக் கொண்ட உபதேச சட்டங்களை அவருக்கு எடுத்துச்

சொன்னார்கள். அவர் அவர்களுடைய கல்வி, வாழ்க்கை வசதிகள், தகுதிகளை வைத்து அவர்கள் கூறிய சத்தியத்தை எடை போடாமல், வேத வாக்கியங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் தன் உபதேசத்தை திருத்தி அமைத்துக் கொண்டு இயேசுவே கிறிஸ்து என்று உபதேசிக்கத் தயங்கவில்லை,

அப்பொல்லோ தான் அறிந்த சத்தியத்தை நல்மனச் சாட்சியுடன் தைரியமாய் மக்களுக்கு உபதேசித்தான் பெரிய மனிதர்களையும், வேண்டியவர்களையும் பிரியப்படுத்தும் எண்ணத்துடன் குழையவில்லை. ஆதாயம் தேடும் நோக்கத்தோடு மழுப்பவில்லை; மாயம் பண்ணவில்லை.

ஆகவே போதகர்களே! நாமும் அப்பொல்லோவின் சிறந்தமுன் மாதிரியைப் பின்பற்றி

1. எல்லாக் காலத்திலும் ஒப்புவமையற்ற நூல் என்று போற்றப்படும் வேதாகமத்தைக் கற்று வேத அறிவைப் பெருக்க முயற்சி எடுப்போம்.

2. நமக்குத் தெரிந்த மட்டும் சுத்த நல்மனச் சாட்சியுடன் தெளிவாய் போதிப்போம்;

3. நம் கற்பனையில் தோன்றுகின்ற மாதிரி வியாக்கியானம் கொடுத்து நாமும் கெட்டு மற்றவர்களையும் குழப்பாமலிருப்போம்.

4. வேதாகமத்தின்படி இது தவறு என்று எவரேனும் சுட்டிக் காட்டினால் அவர்களை எதிரிகளாக எண்ணிக் கொண்டு அவர்களுடைய யோக்கியதையைக் குறித்து வினா எழுப்பாமல் எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள முயலுவோம்,

### 4. அவன் ஜெப ஆலயங்களில் தைரியமாகப் பேசினான்:

இவ்விதமாக நம்முடைய சகோதரர்கள் வேத வசனத்தின் வெளிச்சத்தில் தங்கள் உபதேசங்களை அமைத்துக் கொண்டும், தவறுகள் சுட்டிக் காட்டப்படும் பொழுது இவர்கள் சொல்லி நாம் கேட்பதா, நம் தகுதி யென்ன, அவர்கள் தகுதியென்ன என்று நினையாமல் காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வசனங்களை ஆராய்ந்து பார்த்த பெரோயா பட்டணத்து மக்களைப் போல் நடந்து கொள்வார்களானால் இன்று சின்னா பின்னமாகி மாற்றார் மத்தியில் மகிமையிழந்து கிடக்கும் நிலை கிறிஸ்தவத்துக்கு வந்திராது.

பாப் ரேலி

# கேள்வி-பதில்

**1. குழந்தைகள் பிறக்கும் போதே பாவிகளா?**

இல்லை. பாவம் பரம்பரைச் சொத்து அல்ல பாவம் தேவனுடைய கட்டளைகளை மீறுவதால் ஏற்படுகிறது. எசே. 18:20; 1யோவான் 3:4, தேவன் நமது ஆவிகளின் தகப்பன் எபி 12.9. அதாவது தேவன் நமக்கு தமது ஆவியைக் கொடுத்திருக்கிறார். ஆகவே நாம் பிறக்கும்போது மாசற்றவர்களாகவும், தூய்மையாகவும் இருக்கிறோம். இயேசு வளர்ந்து ஆளானவர்கள். குழந்தைகளைப் போல மாறினால் இரட்சிக்கப்படுவார்கள் என்று கூறியதை எண்ணிப் பாருங்கள் (மத் 18:3,4) அதன் கருத்து இதுதான்.

**2. தேவன் எல்லா மக்களையும் நேசிக்கிறாரா ?**

ஆம். எல்லா மனிதர்களும் பாவத்திலிருந்து விடுதலையடைய வேண்டும் என்பதற்காகத்தானே தமது ஒரே பேறான குமாரனை பலியாக ஒப்புக் கொடுத்தார். யோவான் 3:16 ஒரு மனிதனுடைய மதிப்பு இந்த உலகத்தின் மதிப்பை விட அதிகமானது என்கிறார் இயேசு (மத் 16:26) ஒரு மனிதன் இன்னொரு மனிதனை எவ்வளவு அதிகமாக நேசிக்க முடியுமோ அதைக் காட்டிலும் அதிகமாக தேவன் நம் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார். அதனால் தானே இன்னும் உலகத்தை அழிக்க மனமில்லாமல் நீடிய பொறுமை காட்டி வருகிறார் 2 பேது 3:9

**3, எல்லா மனிதர்களுமே கெட்டுப் போய் விட்டார்களா ?**

எல்லோரும் என்றால் தன்னுடைய நிலையை அறிந்து கொள்ளும் வயது வந்த அனைவரும் கெட்டுப் போய்விட்டார்கள் என்று பொருள் கொள்ள வேண்டும், ரோமர் 3:23. ஆனால் குழந்தைகளும். மூளை வளர்ச்சியற்ற - தான் செய்கிறதைப் புரிந்து கொள்ள முடியாத மக்களும் உலகத்தால் கறைபடாமல் தூய்மையை இழக்காமல் இருக்கிறபடியால் அவர்கள் இக் கணக்கில் அடங்க மாட்டார்கள்.

**4. அப்படிக் கெட்டுப் போன மக்கள் எல்லோருமே இரட்சிப்படைய முடியுமா ?**

சந்தேகமில்லாமல் ஆம், கெட்டுப் போன அனைவருமே இரட்சிக்கப்பட வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார் (1 தீமோ 2:4; 2 பேதுரு 3:9) யாருக்கெல்லாம் விருப்பமோ அவர்கள் இரட்சிப்படைய முடியும் (யோவான் 3:16), வெளி 22.17)

**5. ஒருவன் எப்படி இரட்சிப்படைய முடியும் ?**

இரட்சிப்படைவதற்கு முதற்படியாக இயேசுவை தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும். (யோவான் 3:16; 8:24)

விசுவாசிப்பது என்ருல் பாவத்திலிருந்து விடுதலையளிக்க அவருக்கு வல்லமை யுண்டு என்று நம்புவதாகும். விசுவாசிப்பதும் அவர்மேல் நம்பிக்கை வைப்பதும் என்ருல் நம்முடைய பாவங்களை விட்டு விலகி கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு அவருக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுதல் ஆகும். ரோமர் 6:3; கலா 3:27 ஞானஸ்நானம் பெறுவதின் அவசியம் என்னவெனில் ஞானஸ்நானத்தின் மூலம் இயேசுவின் இரத்தத்தினுல் கிடைக்கும் விடுதலை கிடைக்கிறது. (எபேசி 1:17-19 கொலே 1:14)

**6. கிறிஸ்துவுக்குள் ஒருவனைக் கொண்டு வருகிற ஞானஸ்நானம் முழுக்கா ?**

ஞானஸ்நானம் என்ற தமிழ் சொல்லுக்கு 'பாப்டிஸோ' என்ற கிரேக்க வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது அதற்கு தமிழில் சரியான அர்த்தம் மூழ்குதல் அல்லது அமிழ்த்துதல் என்பதாகும். ஞானஸ்நானத்தின் போது ஒருவன் அடக்கம் செய்யப்படுகிருன். (ரோமர் 6:4; கொலே 2:12)

**7. இப்பொழுதும்கூட சிலர் ஞானஸ்நானம் என்ற பெயரில்தண்ணீரைத் தெளிக்கிருர்களே, அது எப்போது எப்படி ஆரம்பமாயிற்று ?**

புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவம் நிறுவப்பட்டு நீண்டநாட்களுக்குப் பிறகு இந்த முறை தந்திரமாக உள் நுழைந்தது. மரித்துப் போகக் கூடும் என்று கருதப்பட்ட சில நோயாளி விசுவாசிகளின் நன்மைக்காக என்ற போர்வையில் முதல் முதலாக இது அறிமுகமாயிற்று. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அதையே விஸ்தரித்து பரவலாக்கி சட்டங்களும் இயற்றி விட்டார்கள். இது மனிதருடைய இடைச் செருகல். தேவன் அன்றும் அதை அங்கீகரிக்கவில்லை. இன்றும் அங்கீகரிக்கப் போவது கிடையாது. 1 தீமோத் 4:1; 2 தெச 1:4

**8. குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிருர்களே, அது சரியா ?**

இல்லை, முதலாவது, குழந்தைகளுக்கு ஞானஸ்நானமே தேவை இல்லை. ஏனெனில் அவர்கள் கறைபடாதவர்கள். மேலும் விசுவாசம் உள்ளவனுகி ஞானஸ்நானம் பெற்றவனே இரட்சிக்கப்படுவான் என்று வேதம் கூறுகிறது. மாற்கு 16:15, 16; அப் 8:37; ரோமர் 10:10; குழந்தைகள் விசுவாசிக்க முடியுமா ? மேலும் மனந்திரும்பி பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறுகிறது. அப்2:38; 3:20, 22:16 இவைகளையெல்லாம் குழந்தைகள் செய்ய முடியாது. ஆகவே இச் செயல் அர்த்தமற்றது: தேவன் அங்கீகரிக்காதது.

9. ஒருவன் மேலே கூறியுள்ள காரியங்கள் அனைத்தையும் சரியாகச் செய்து பாவ மன்னிப்புப் பெற்றிருந்தால் அவன் எந்தச் சபையில் அங்கம் வகிக்க வேண்டும்?

நண்பனே! சபை ஒன்று தானே. புதிய ஏற்பாட்டுச் சபை ஆரம்பமான போது இரட்சிக்கப்பட்டவர்கள் யாவரும் ஒரே சபையில் தான் சேர்க்கப்பட்டார்கள், அது கிறிஸ்துவின் சபை தான். ரோமர் 16:16. சபைக்கு வேறே வேறே மாற்றுப் பெயர்கள் இருந்தாலும் கிறிஸ்து தம்முடைய சுய இரத்தத்தால் சபையை சம்பாதித்த காரணத்தினாலும் (அப் 20:28) அதை தான் சரீரம் என்று கூறியிருப்பதாலும் (எபே 1:23) ஓர் 'சபை' என்று ஒருமையில் கூறியிருப்பதாலும் (மத் 16:18) நாமும் அதையே செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார் ஏனெனில் நாம் யாவரும் ஒன்றுயிருக்க வேண்டும் என்பதுதானே அவர் விருப்பம். யோவான் 17:21; 1 கொரி 1:10 போன்ற வசனங்களைத் தியானித்து உங்கள் பட்டணத்திலோ. அருகிலோ கிறிஸ்துவின் சபையார் இருந்தால் தேடிக் கண்டு பிடித்து, அவர்களோடு ஐக்கியம் கொள்ளுங்கள். காலம் சமீபித்து விட்டது. பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும் மத் 15:13,

பேஸில்ஓவர்டன்

## செல்வந்தர்களே நீங்கள் பேயாய் அலைந்து சேர்க்கிற செல்வம் யாருக்கு?

தேவன் தமது பார்வைக்கு நல்லவனுயிருக்கிறவனுக்கு ஞானத்தையும், அறிவையும், இன்பத்தையும் அளிக்கிறார். பாவஞ் செய்கிறவனுக்கோ தமது பார்வைக்கு நல்லவனுயிருக்கிறவன் வசமாய் வைத்துவிட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்து வைக்கும் தொல்லையை நியமித்திருக்கிறார்.

## செய்யக் கூடாதவைகள் ஐந்து

நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே.

உன்னிடத்தில் பொருள் இருக்கையில் உன் அயலானை நோக்கி நீ போய்த் திரும்ப வா, நாளைக்குத் தருவேன் என்று சொல்லாதே.

அச்சமின்றி உன்னிடத்தில் வாசம் பண்ணுகிற உன் அயலானுக்கு விரோதமாகத் தீங்கு நினையாதே.

ஒருவன் உனக்குத் தீங்கு செய்யாதிருக்க, காரணமின்றி அவனோடே வழக்காடாதே.

கொடுமையுள்ளவன்மேல் பொறாமை கொள்ளாதே, அவனுடைய வழிகளில் ஒன்றையும் தெரிந்து கொள்ளாதே.

# கிறிஸ்தவனு, அவன் யார்?

ஒரு காலத்தில் கிறிஸ்தவத்துக்கு சிறப்பான இடம் இருந்தது மக்கள் அதைப் பற்றி உயர்வாக நினைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த நிலை நாளுக்கு நாள் மங்கி மறைந்து கொண்டு வருகிறது. விசுவாசமற்ற பெயர்க் கிறிஸ்தவக் குடும்பங்களில் பிறந்தவர்களும் கிறிஸ்தவத்தை அதிகமாகத் தழுவியுள்ள நாடுகளும் மக்கள் கணக்கெடுப்பில் கிறிஸ்தவர்கள் என்று சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர் அவர்களில் பெரும்பாலோருக்கு கிறிஸ்தவ உபதேசங்கள் தெரியாதது மட்டுமில்லை; அதை அவர்கள் வாழ்க்கையில் மறுதலித்துக் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்தவம் மார்க்கமாய் இருந்த நிலை மாறி மதமாக்கப் பட்டு விட்டது. அதனால் கிறிஸ்துவின் கொள்கைகளும் உபதேசங்களும் பின்னுக்குத் தள்ளப்பட்டு அந்தத் தழுவியுள்ளவர்களின் கோஷங்களும், கோஷ்டிச் சண்டைகளுமே கிறிஸ்தவம் என்றாகி விட்டது. ஆகவே ஏனைய மதங்களுக்கு இருக்கிற கெட்ட பெயர் இதற்கும் வந்து சேர்ந்து கொண்டிருக்கிறது.

ஆகையால் நாம் இந்தச் சந்தடிகளிலிருந்து விலகி கிறிஸ்தவம் தோன்றிய காலத்தில் அது எவ்வாறு இருந்தது. மக்களை அது எதைக் கொண்டு ஈர்த்தது என்பனவற்றை ஆராய்ந்து நாமும் அவ்வழி நடப்பதற்கு முயல்வோம்.

கிறிஸ்தவன் என்ற பெயரே கிறிஸ்துவைப் போல் இருக்கிறான் அல்லது கிறிஸ்துவின் கொள்கைகளைப் பின்பற்றி நடக்கிறான் என்று குறிப்பிடுமாறு அமைந்திருக்கிறது... 'தேவன் எவர்களை முன்குறித்திருக் கிறாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்ப-தற்கு முன்குறித்திருக்கிறார் (ரோமர் 8:29) என்று கூறுகிறது. மேலும் கலா 2:20-ல்' கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன். ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல; கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத் திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத் தாம் ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பவுல் அப்போஸ்-தலன் 'என் சிறு பிள்ளைகளே கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன்' என்கிறார் கலா 4:19 இவைகளையெல்லாம் வாசித்துத் தியானிக்கும் போது நாமெல்லாம் கிறிஸ்தவத்தைப் பற்றி எவ்வளவு விளையாட்டுத்தனமாக எண்ணிக் கொண்டிருக்கிறோம் என்பது புலனாகிறது:

கிறிஸ்தவன் என்ற சொல் புதிய ஏற்பாடு முழுவதிலும் மூன்றே முறைதான் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது, அப் 11;26 கிறிஸ்து வின் தொண்டர்களைக் குறிக்கும் வகையில் உபயோகப்படுத்தப்பட்-

டிருக்கிறது. அப் 26:28ல் அகிரிப்பாராஜா கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று விரும்பி தன்னோடு பவுல் அப்போஸ்தலன் உரையாடு வதாகக் குற்றம் சாட்டினதை எழுதியிருக்கிறது. மூன்றாவது இடத்தில் ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கை முறையைப் பற்றி விளக்கியிருக்கிறது 1 பேது 4:16. ஆனால் தற்காலத்தில் கிறிஸ்தவம் சின்ன பின்னமாகி பல விதமான பெயர்களை இஷ்டம் போல் சூட்டிக் கொண்டு தங்கள் சௌகரியத் துக்கு உபதேச விளக்கங்கள் கொடுத்துக் கொண்டு அலைகிறார்கள், இதனால் மனிதர்கள் பெருமைப்படுத்தப் படுகிறார்கள்; கிறிஸ்துவோ அவமானப் படுத்தப்படுகிறார்.

தற்காலத்து வேத போதகர்களுக்கு பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் உள்ள வித்தியாசம் தெரிவதில்லை. எது அவர்களுக்கு ஆதாயமோ அதை எடுத்துக்கொள்வர். காணிக்கை என்று வந்தால் தசம பாகம் என்று பழைய ஏற்பாட்டைப் போதிப் பார்கள், நகை அணிதல் என்றால் புதிய ஏற்பாட்டைப் பார் என்பார்கள் ஒருவன் கிறிஸ்தவனா இல்லையா என்பதைப் பழைய ஏற்பாட்டை வைத்து தீர்மானம் செய்ய முடியாது. கலா 3:18-22 வரை உள்ள வசனப் பகுதியைப் பார்த்தால் மோசேயின் நியாய பிரமாணம் ஒரு மாற்று ஏற்பாடு என்பது தெரியவரும். வசனம் 23ல்... நாம் அடைக்கப் பட்டவர்களாய், நியாயப் பிரமாணத்தின் கீழ் காவல் பண்ணப் பட்டிருந்தோம் என்கிறது அப் 15:10 நியாயப்பிரமாணத்தை அடிமைத்தனத்தின் நுகம் என்று வர்ணிக்கிறது. ஆனால் கலா 5:1, கிறிஸ்துவுக்குள் நாம் சுதந்தரமுள்ளவர்களாய் இருக்கிறோம் என்கிறது ஆனபடியால் ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதற்கு நியாயப் பிரமாணம் அடங்கிய பழைய ஏற்பாடு பயன்தராது; அப்படிச் சொன்னால் பார்த்தீர்களா. பார்த்தீர்களா பழைய ஏற்பாடு வேண்டாம் என்று சொல்லுகிறார்கள் என்று குற்றம் சாட்டுவர். அது அபத்தமான குற்றச் சாட்டு. பழைய ஏற்பாடு நமக்கு வேண்டும், ஏனெனில் பழைய ஏற்பாடு இல்லாமல், புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள பல விஷயங்களை நாம் புரிந்து கொள்ள முடியாது. தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ள வர்களாகும்படிக்கு முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது (ரோமர் 15:4; கொரி10:11.)

மேலும் கலா 3:24 இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப் பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவி னிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாய் இருந்தது, என்று கூறுகிறது '' உபாத்தி '' என்று குறிப்பிட்டிருக்கிற பதவி தற்காலத்து பள்ளிக்கூட '' ஆயா '' வேலைக்குச் சமமானவை. அவர்கள் ஆசிரியர்கள் அல்ல; பள்ளி வரை வழி நடத்திச் செல்லுகிற பொறுப்பாளர்கள், அதற்குப் பிறகு ''ஆயா'' அல்ல, ஆசிரியரே பொறுப்பாகிறார். அதைத்தான் ரோமர் 10:4 கூறுகிறது. '' கிறிஸ்து நியாய பிரமாணத்தின் முடிவாக

இருக்கிறூர். பழைய உடன்படிக்கையின் ஷரத்துக்ளெல்லாம் வருங் காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது, அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது என்கிறது. கொலோசெயர் நிருபம். கொலோ 2:13-17. மோசேயின் பிரமாணங்கள் வழியாக அல்ல. கிறிஸ்துவின் வழியாகவே நாம் புத்திர சுவிகாரத்தைப் பெற்றிருக்கிறேும். என்று பவுல் விளக்குகிறூர். கலா 4:1-7

காரியங்கள் இப்படி இருக்கிறபடியால் நியாயப் பிரமாணம் நீக்கப்பட்டு கிறிஸ்துவின் நீதிச் சட்டமாகிய விசுவாசம் நடைமுறைக்கு வந்திருக்கிறது "விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே" (கலா 3:25) ஆகையால் ஒருமனிதன் பழைய ஏற்பாட்டுக் காரியங்களையும் சேர்த்துத் தான் கிறிஸ்தவம் என்று எண்ணுவானுனல் கிறிஸ்துவும் அவர் அருளிய பிரமாணங்களும் கிறிஸ்தவ வாழ்க்கைக்குப் போதுமானவைகளைக் தரவில்லை என்று ஆகிறது. அப்படி நினைக்கிறவர்கள் கலாத்தியர் நிருபம் சொல்வதைக் கவனியுங்கள் நியாயப் பிரமாணத்தினுல் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள் கலா 5:4. இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப் போடுகிறூர் (எபி 10:9) என்றும் சட்ட திட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தைத் தம்முடைய மாமிசத்தினுலே ஒழித்ததார் என்றும் (எபே 2:15) அந்த முக்காடு கிறிஸ்துவினுலே நீக்கப்படுகிறது என்றும் (2 கொரி 3:14.) சொல்லப்பட்டிருப்பவைகளைச் சிந்தித்துப் பாருங்கள்.

ஒருவன் எப்படிக் கிறிஸ்தவனுக வேண்டும் என்பது ஒருவன் கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தைப் பொறுத்திருக்கிறது. கலா 3:26ல் நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினுல் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுகிற அனைவரும் இவ்வாறே தேவனுடைய குமாரர்களும் குமாரத்திகளுமாகிறூர்கள். அப் 15:7-11ல் பேதுரு யூதர்களும், புற ஜாதியாரும் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசிக்க முடியும், தேவன் பட்சபாதமுள்ளவர் அல்லர், எல்லாருமே கிருபையினுலே இரட்சிக்கப்பட முடியும்; நியாயப் பிரமாணத்தைக் கடைப்பிடித்ததனுலே அல்ல என்கிறூர். அப்படியானுல் ஒருவன் இன்ன இனத்தவர் அல்லது நாட்டவர் என்பதினுல் அல்ல, தனிப்பட்ட முறையில் அவரவர் கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தைப் பொறுத்து இருக்கிறது.

கிறிஸ்துவின் மேல் விசுவாசம் என்று கூறும் போது, அவரை நம்பி அவரால் நம்மை இரட்சிக்க வல்லமை உண்டு என்று உணர்ந்து கீழ்ப்படிதல் என்று பொருள்படும் தேவன் மேல் நம்பிக்கை வைத்துப் பேர் பெற்ற விசுவாச வீரர்கள் பட்டியலில் இடம் பெற்ற ஏராளமான

மக்களை எபிரேயர்-11ம் அதிகாரத்தில் காணமுடியும், அவர்கள் யாவரும் அவர் சொன்னதை நம்பினதோடு நிறுத்திக் கொள்ளாமல் அவருடைய வல்லமையில் நம்பிக்கை தெரிவித்து அவருக்குக் கீழ்ப்படிந்ததினாலே நன்மையைக் கண்டடைந்தவர்கள்.

ஒருவன் கிறிஸ்துவனா இல்லையா என்பதை யார் ஞானஸ்நானம் பெற்றக்கொள்கிறார்களோ அதை வைத்து தீர்மானிக்கப்படும்.

''ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்கள என்று கலாத்தியருக்கு எழுதுகிறார் கலா 2:27 ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறபடியால் அவன் கிறிஸ்தவன்: கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசம் அவனை அவருடைய வழியில் நடக்கும்படி ஏவுகிறது. ஆனால் வெறும் விசுவாசம் மட்டுமே போதாது. பிசாசுகள் கூட விசுவாசித்து நடுங்குகின்றன. (யாக் 2:19; மாற்கு 1:23, 24) ஆனாலும் அவைகள் கிறிஸ்தவர்கள் அல்ல.

விசுவாசித்து ஞானஸ்நானம் பெறும் பொழுது ஒருவன் கிறிஸ்துவுக்குள் வருகிறான். கலா 3:26, 27. ஞானஸ்நானம் ஒரு மனிதனைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வரும் பணியை முழுமையடையச் செய்கிறது ரோமர் 6:3-7 ஒருவன் சரியான காரணத்துக்காக ஞானஸ்நானம் பெறாமலிருந்தால் அவன் மறுபடியும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதில் தவறில்லை. (அப் 19:1-6)

கலர் 3:27 கூறும் வெளிச்சத்தில் நாம் கீழ்க் கண்ட காரியங்களைக் கவனிக்க முடியும் கிறிஸ்துவுக்கு வெளியே ஒருவனும் கிறிஸ்தவனாக இருக்க முடியாது. ஞானஸ்நானம் ஒருவனைக் கிறிஸ்துவுக்குள் கொண்டு வருகிறது. ஆகவே ஒருவன் சரியான முறையில் சரியான காரணத்துக்காக ஞானஸ்நானம் பெறவில்லை என்றால் அவன் கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்வதில் பொருள் இல்லை.

மேலும் கலா 3:27 ஞானஸ்நானத்தின் மூலமாக ஒருவன் கிறிஸ்துவைத் தரித்துக் கொள்கிறான் என்று போதிக்கிறது. கிறிஸ்தவன் என்று சொல்லிலேயே அவன் கிறிஸ்துவை உடையவன் என்ற காரியத்தை விளங்கிக் கொள்ள முடிகிறது ஆகையால் விசுவாசிக்கிற ஒருவன் ஞானஸ்நானம் பெறாமல் கிறிஸ்தவன் என்று கூறிக் கொள்ளும் தகுதியை அடைவதில்லை.

ஒருவன் ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவை சரீரப் பிரகாரமாகவும் ஆவியின் பிரகாரமாகவும் தரித்துக் கொள்ளுகிறான். (ரோமர் 13:14; பிலி 2:5)

ஒருவன் கிறிஸ்தவனா இல்லையா என்பது உலக சம்பத்தையும் பிறப்பையும், நடைமுறைகளையும் வைத்துத் தீர்மானிக்கப்படுவதில்லை கலா 3:28ல் யூதனென்றும், கிரேக்கனென்றும் இல்லை. அடிமையென்றும்

சுயாதீனனென்றுமில்லை. ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை. நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். கிறிஸ்தவ மார்க்கம் ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கோ நாட்டினர்க்கோ, மொழியினருக்கோ, நிறத்தவருக்கோ சொந்தமானதன்று. ஆண், பெண், ஏழை, பணக்காரன், அடிமை சுதந்தரவாளி என்ற பாகுபாடு. அற்றது சமுதாய வேற்றுமைகள் எல்லாம் இயேசுவுக்கு உடன்பாடானது அல்ல, நான் கத்தோலிக்கன், நான் புரட்சியாளன், நான் இந்தக் குழுவைச் சேர்ந்த-வன் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவன் என்பதும் மனிதர் கோட்பாடுகளே. அவைகள் உடைத்து நீர்மூலமாக்கப்பட வேண்டும்.

உன்னைக் கிறிஸ்தவன் என்று மட்டுமே கூறிக்கொள். வேறு எல்லாவித அடைமொழியையும் அகற்றிவிடு. கர்த்தருடைய வசனத்தை மட்டுமே நம்பு; ஏற்றுக்கொள்; பிறருக்கும் உபதேசம் பண்ணு. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்களின் மாதிரிகளைப் பின்பற்று. கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை வைத்து அவருடைய உபதேச சட்டங்களுக்கு மட்டுமே கீழ்ப்படி. அப்பொழுது நீ கிறிஸ்தவனாக மட்டும் இருப்பாய். டான் ரகல்

## கர்த்தர் வெறுக்கும் ஏழு காரியங்கள்.

1. மேட்டிமையான கண்
2. பொய் நாவு
3. குற்றமற்றவரிகளுடைய இரத்தம் சிந்தும் கை
4. துர் ஆலோசனையைப் பிணைக்கும் இருதயம்
5. தீங்கு செய்வதற்கு விரைந்தோடும் கால்
6. அபத்தம் பேசும் பொய்ச் சாட்சி
7. சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல்

## பிறன் மனை சேர நினைப்பவன் ஆக்கினைக்குத் தப்ப முடியாது

தன் வஸ்திரம் (வேஷ்டி) வேகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக் கொள்ள முடியுமோ?

தன் கால் தடாமல் எவனாவது தழலின் மேல் நடக்கக் கூடுமோ? முடியாது என்பது உங்கள் பதில் ஆனால் பிறனுடைய மனைவியிடத்தில் பிரவேசிப்பனும், அவளைத் தொடுகிற எவனும் ஆக்கினைக்குத் தப்ப முடியாது.

மதிகேடாய் நடக்கிற அழகுள்ள ஸ்திரீ; (பெண்) பன்றியின் மூக்கில் உள்ள பொன் மூக்குத்திக்குச் சமானம்.

எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக் கூடுமோ? கூடுமானால் தீமை செய்யப் பழகின ஒருவன் நன்மை செய்யக் கூடும்.

# சங்கீதம்-ஓர் கண்ணோட்டம்

நமது ஆலயங்களில் தெய்வ ஆராதனையில் ஒரு கீர்த்தனை நூலை எவ்வாறு உபயோகிக்கிறோமோ, நாம் கடவுளை வழிபடுகிறதற்கு பக்திக்குரிய பாட்டுகளை எப்படிப்பாடுகிறோமோ, அவ்வாறே, யூதர்களும் சங்கீத நூலை தங்கள் ஆலய ஆராதனைகளில் உபயோகித்தார்கள். இந்த நூல் யூதர்களின் பாமாலை; நமது கீர்த்தனைகளில் ஒவ்வொரு பாட்டிற்கும் எவ்விதமாக இராகம், தாளம் ஆக்கியோன பெயர் முதலியவை குறிப்பிடுகிறோமோ அவ்வாறே இந்த சங்கீதங்களிலும் இராகங்களின் பெயர், ஆக்கியோர்கள் பெயர் முதலியன குறிப்பிடப்பட்டிருந்தன. இதோடுகூட அந்தந்த சங்கீதத்திற்கு கூட வாசிக்கதக்க நரம்புக்கின்னரமோ (யாழ்), ஊதுகுழலோ (நெகிலோத்து) இப்படிப் பட்டவைகளையும் குறிப்பிட்டிருந்தார்கள்.

## 1. ஸ்தானம்:-

பழைய ஏற்பாட்டின் மூன்று முக்கிய கோணங்களில் சங்கீதம் பக்தி நூல் எனப்படும். மூன்றாது பகுதியாகிய கெத்துபீம், அல்லது ஹேகியோகிராபாவின் (Hagiographa) முதல்பாகம் சங்கீதம், நீதிமொழிகள், யோபு, கீதகீதம் (உன்னதப்பாட்டு), ரூத்து, பிரலாபப் பாட்டு (புலம்பல்), பிரசங்கி, எஸ்தர், தானியேல், எஸ்ரா, நெகேமியா, நாளாகமம், என்ற நூல்கள் இதன்பின் சேர்க்கையானவை.

## 2. அர்த்தம்:-

எபிரேயமொழியில் தெகிலிம் அல்லது போற்றுதல், ஸ்தோத்திரம் என்றுஅர்த்தங்கொள்ளும் பதத்தால் இது அழைக்கப்பட்டது.

எபிரயே மொழியில் பிரார்த்தனைகள் என்று அர்த்தங்கொள்ளும் தெப்பிலோத் என்ற பதமும் உண்டு. இதனால் சங்கீதத்தை போற்றும் பிரார்த்தனை, ஜெபம் என்று அழைப்பது தகுதியே. ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபம்என்கலாம்.

## 3. இதின் விசேஷம் அல்லது முக்கியம்:-

யூதர்கள் தெய்வாலயத்தில் கடவுளை வழிபடும் தெய்வ ஆராதனையில் சங்கீதம் முக்கியமான ஒரு பாகம். நரம்பு வாத்தியங்களோடு, சங்கீதங்களோடும் கடவுளைப் போற்றிப்பாடுவார்கள். தற்காலத்தில் பல சபை ஆராதனைகளில் விஷேமாக ரோமன்கத்தோலிக்க சபை பூசைகளில் சங்கீதங்கள் பல பாடுகிறார்கள். சங்கீதம் நமது ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு மிகவும் அருமையானதென்பதை அவர் திருவாய் மொழிந்திருக்கும் பல வசனங்களால் அறியலாம். சிலுவையில் அவர்

உரைத்த ஏழுவார்த்தைகளில் இரண்டு சங்கீதங்கள் இருக்கின்றன; மாற்கு 15:34, சங்கீதம் 22:1லும், லூக்கா 23:46. சங். 31:5லும் இருப்பதே,

ஆதியிலிருந்து எத்தனையோ கிறிஸ்தவ பக்தர்கள் தங்கள் துன்ப மரண வேளைகளிலும், சந்தோஷ இன்ப வேளைகளிலும் இந்த சங்கீதங்களை வாசித்து ஆறுதல் தேறுதல் அடைந்ததற்கு எண்ணிறந்த சான்றுகள் உண்டு. சிறிய பாலகனும் அர்த்தம் உணர்ந்துபாடத்தக்க சங்கீதங்கள் உண்டே, உ-ம். சங். 23. எபிரேயு கவி இலக்கணத்தில் மோனை, அடியடியாக அணிவகுத்தல் நமது கவிகளில் இருப்பது போல் கிடையாது. ஆனால் தமிழ் பழமொழிகளில் எதிரடிகள் மாறி மாறி வருவதுபோல் உண்டு. உதாரணம சங்கீதம் 2: 10. 1:6, 1-1. 29:1. இது விஷயமாக அலங்காரம் என்ற 10வது பகுதியில் அதிக விபரம் பார்க்கலாம்.

## 4. நூலாசிரியர் :-

சங்கீதம் ஒரே கவிராயரால் இயற்றப்பட்டதல்ல. பல கவிராயர்கள். பல நூற்றாண்டுகளில், பல சந்தர்ப்பங்களில், இயற்றிப்பாடியவைகளைப் படியாக சேர்த்து பின்பு ஒரே கோர்வையாக பிரசுரிக்கப்பட்டது. முதல் பாகத்திலுள்ள சங்கீதங்கள் அநேகமாக தாவீதுமன்னன் இயற்றியவைதான். ஆனால் இவனுக்குப் பின் காலத்தில் சிறையிருப்பின் காலம் மட்டும் புது புது சங்கீதங்கள் இயற்றப்பட்டதுண்டு. நமது சங்கீதத்திற்கு முன் காலத்திலேயே பல பழைய ஏற்பாட்டு நூல்களில் சங்கீதங்கள் உள்ளன, உதாரணம், பட்டய பாட்டு ஆதி. 23, 23; சிறையிருப்புக் காலப்பாட்டு, எண்ணாகமம் 21: 17, 18; யாத்திராகமம் 15 : 1-21 எகிப்திலிருந்து விடுதலைப்பாட்டு: தெபோராளின் சங்கீதம் நியாயாதிபதிகள் 5 : கீத கீதம் (உன்னதப்பாட்டு) கலியாண பாட்டுகளாக இருக்கலாம்; ஏசாயா 12 ; 14. 4 : 27. பிரலாபப்பாடல் (புலம்பல்) ஒரு துயரச் சங்கீதம், தமிழ்ப் பெண்கள் மரித்தோருக்காக ஓலமிடும் ஒப்பாரி போன்றது,

## 5. சங்கீதத்தின் பாகங்கள் அல்லது பிரிவுகள் :-

சங்கீத நூல் ஐந்து பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும் ஒரு மங்கள ஸ்தோத்திர வாழ்த்து சேர்க்கப்பட்டிருக்கிறது. பின் குறிப்பிட்டிருக்கிறது. பின் குறிப்பிட்ட சங்கீதங்களின் கடைசி வசனங்களை கவனிக்கவும். சங்கீதம் 41, 72, 89, 106, 150.

பிரிவுகள்,

1. 1—41.
2. 42—72.
3. 73—89.
4. 90-106.
5. 107-150.

எழுபதுபேர் ஆகமம் என்ற பழைய ஏற்பாட்டு நூலிலும் இப்படி பிரிக்கப்பட்டிருக்கிறது. சங்கீதம் 150 ஒரு மங்களப் பாட்டுப் போல் இயற்றப்பட்டிருக்கிறது.

## 6. ஏலோயீம்-யெகோவா சங்கீதங்கள் :-

ஏலோயீம் சர்வ ஜீவனுக்கும் கடவுள், எவருக்கும் கடவுள். யெகோவா, இஸ்ரவேலுடன் உடன்படிக்கை செய்த அவர்கள் சொந்தக் கடவுள். இரண்டாம் மூன்றும் பாகத்தில் கடவுளுக்கு ஏலோயீ என்ற பெயர் வழங்கப்படுகிறது. பகுதிகள் 1, 4, 5-ல் யாவே, எகோவா என்று கடவுளுக்கு பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. இப் பதங்களைக் கவனித்து சங்கீதங்கள் இயற்றப்பட்ட காலங்களை அறியலாம். தங்கள் கால நிலைக்கேற்ப திருத்திய சமயமாயிருக்கலாம். முதல் பாகத்தில் இஸ்ரவேலுடன் உடன்படிக்கை செய்த அவர்கள் சொந்த தெய்வப் பெயர் எகோவா என்ற பதம் 272-முறை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஏலோயீம் அல்லது கடவுளின் பொது பெயரோ 15-தடவை மாத்திரமே வருகிறது. இரண்டாம் பாகத்தில் இதற்கு மாறாக ஏலோயீம் என்ற பதம் 164-தடவையும் எகோவா என்ற பதம் 30-தடவையே வழங்கப்பட்டிருக்கிறது.

111. 118 ஹல்லேலு சங்கீதங்கள் பஸ்கா பண்டிகைக் காலத்தில் பாடுபவை. 104-107, 11-117 அல்லேலூயா சங்கீதங்கள் யாத்திரை சங்கீதங்கள் என்பவை 120-134. யாத்திரை கீதங்கள் திரு நகரத் திற்கு பண்டிகைக்குப் போகும்போது எருசலேம் வழியாக மலையோரங் களில் பாடுவது.

## 7. தலைக்குறிப்புகள் :-

முதல் புத்தகத்திலுள்ள 41 சங்கீதங்களும் தாவீதின் சங்கீதங் கள் என் அழைக்கப்படுகின்றன. மற்றவை ஆசாப், கோராகுப் புத்திரரின் பேரால் அழைக்கப்படுகின்றன, சங்கீதங்களில் தலைக் குறிப்புகள் பழமையானாலும் அவை மூல சங்கீதங்களைச் சேர்ந்தவை யல்ல.

எழுதிய காலம் யார் எழுதியது, எந்த சந்தர்ப்பத்தில், என்ன வாத்தியத்தோடு பாடப்படவேண்டியவை என்று இவை குறிப்பிடப் பட்டிருக்கின்றன. தாவீதின் சங்கீதம் என்று குறிப்பிட்டவைகள் எல்லாம் தாவீதுதான் இயற்றியவை என்று சொல்லக்கூடும். பின்வருப வைகள் ஆலயம் இருந்த காலத்தவை 27 : 4, 28, 2; 65-4, கவி ஆசிரியர்கள் சிறையிருப்புக்குப்பின் இயற்றியவை, 75, 126, 137.

## 8, அலங்காரம் :-

இடைக்காலத்தில், தாவீதுக்குப்பின் சிறையிருப்பு காலத்தில், சங்கீதங்களின் சில வசனத்திற்குப்பின் ''சேலா'' என்ற பதம் வருகிறது.

அதன் அர்த்தமாவது "பாடகனே, (திருப்பு" திரும்பவும் இதைப் பாடு) என்று சிலர் கூறுகிறார்கள். ஒருவேளை திருப்பிப்பாட உத்திரவாகவோ, அல்லது வாத்தியக்காரருக்கு ஒரு அலங்காரமாகவோ உபயோகிக்கப்பட்டிருக்கலாம். கட்டளையோ, அல்லது நிறுத்திப்பாடுவதோ ஏதென்று திட்டமாகச் சொல்லமுடியாது சங்கீதத்தின் முக்கியமான அம்சங்கள், சரணம், பல்லவி, விஷயங்களையும் வாக்கியங்களையும் அணி அணியாக வகுத்து அலங்கரிப்பது.

இரண்டு மூன்று வரிகள் ஒரு வசனமாகவும், சில வசனங்கள் சேர்ந்து ஒரு சரணம்போலவும் வகுக்கப்பட்டு, இவற்றின் இடையில் பல்லவிபோல் ஒரு வசனம் வருவதுண்டு; உ—ம். சேனைகளின் யெகோவா நம்மோடிருக்கிறார், யெகோவா கடவுள் நமது உயர்ந்த துருக்கம், சங்கீதம் 46:7, 11; யெகோவாவின் கிருபையினிமித்தமும் மனுஷ் புத்திரருக்கு அவர் செய்கிற அதிசயத்தினிமித்தமும் இவர்கள் அவரைத் துதிப்பார்களாக, சங்கீதம 107:8,15,21,31ல் நான்கு தடவை யெகோவாவின் கிருபையினிமித்தம் இவர்கள் அவரைத்துதிப்பார்களாக என்றுவருகிறது. ஆனால் இப்படிப்பட்ட பல்லவிகள் போன்றவை வரும் இடம் ஸ்தானம் ஒரு இலக்கணசட்டத்தின்படி அல்லது ஒரு திட்டவட்டமான முறைபடிதான் வரவேண்டுமென்ற நிபந்தனையின்படி இந்த சங்கீதக்காரர் இயற்றவில்லை. தங்கள் உள்ளம் பொங்கிய எழுப்புதலின் படியே இவர்கள் இவற்றை இயற்றியதாக காண்கிறோம். மோனை, அடிகளை அணி வகுத்தல் இல்லை, ஆனால் ஒரு கவி சித்திரமுறையை இங்கு கவனிக்கிறோம். வரிகளில் ஆரம்பத்தில் அக்ஷர அகராதி ஒழுங்கின்படி அக்ஷரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வரிசையாக வரும்படி வசனங்கள் ஆரம்பமாகும், அதாவது முதல் வசனம் முதலாவது அக்ஷரத்தில் பின் வரும் வசனங்கள் முறையே அக்ஷர எழுத்துக்களின் ஒழுங்கின்படி ஆரம்பிக்கும். ஆனாவிலிருந்து ஃனாமட்டும் என்றாற்போல். இதற்கு உதாரணங்கள் சங்கீதம் 119. வேறு உதாரணம், சங்கீதம் 25, 34, 145. சில தீர்க்கதரிசனங்களிலும் இதை கவனிக்கலாம்.

## 9. வாத்தியங்கள் :-

ஆதியாகமம் 4—21. யூபால் கின்னரக்காரர், நாகசுரக்காரரின் தகப்பன் எனப்பட்டிருக்கிறது. யூத ஆராதனைகளில் வீணைகளின் ஓசை, ஆமோஸ் 5:23; நாகசுரம், மேளம், தம்புரு, ஏசாயா 30;29-32. இவற்றைப் பற்றி வாசிக்கிறோம். ஆலய ஆராதனைகளில் சங்கீத சபையார் இரண்டு வகுப்பாராக பிரிந்து ஒரு பகுதியார் பாட, இன்னோர் பகுதி பின்பாட இப்படி மாறி மாறிப் பஜன முறையாகப் பாடியதாகக் காண்கிறோம். பல்லவி பாடும்போது சில வேளைகளில் சபையார் தாங்களும் கூடசேர்ந்து சங்கீதம் 136ல் வருவதுபோல் அவர் கிருபை என்றுமுள்ளது என்று பாடினார்கள். பின்காலத்தில் வாத்தியத்தோடு பாடினார்கள் யாழ் வாத்தியம் உபயோகித்தார்கள் சங் 4—6—54—55—

67—76ல் தலைக்குறிப்பிலும் இப்படி நரம்புக் கின்னரக்காரருடன் பாடும்படி கூறப்படுகிறது, யாழ்-நரம்புக் கின்னரம். நெகிலோத்து என்பது ஊதுகுழல், தம்புரு, மேளம் நாகசுரம், புல்லாங்குழல், சுர மண்டலம் முதலியனவற்றோடு பாடுவார்கள், 1-சாமுவேல் 10:5. இராஜாக்கள் 1—40.

கொம்பு எக்காளம் ஊதுதல்-ஆரம்பத்தில் செம்மறிக்கடாக் கொம்பு ஊதி மக்களை கடவுளை வணங்கும்படி அழைத்தார்கள். யோசுவா 5:8. இதுவேகொம்பு எக்காளம். வெள்ளியில் செய்த எக்காளங்களை(வெள்ளிப் பூரிகளை) ஆசாரியர்கள் பண்டிகை, சடங்கு சமயம் ஊதுவார்கள், எண்ணாகமம் 10:2–10. மேளம் ஓசையுள்ள கைத்தாளம், பேரிகை தம்புரு கொட்டிப்பாடினார்கள், சங்கீதம் 150;5.

சங்கீதங்கள் பலவற்றின் இராகம் நாம் தமிழில் மோகனம், காம்போதி, சகானா என்று குறிப்பிடுவது போல் குறிப்பிட்டிருக்கிறது. இராகங்களுக்குப் பெயர்களுண்டு, அலாமோத் சங் 46, சோஷானிம் சங் 45, அல்தகேத் சங் 58, எதுதூன் சங் 62, செமினீத் சங் 6, இப்படிப் பல இராகங்கள் உண்டு.

## 10. சங்கீதசபை :-

மகாஜனங்கள் ஆசாரியர்கள் தெய்வாராதனைக்கு வருவதற்கு 24-வகுப்பாகப் பிரிக்கப்பட்டிருந்தது போல் ஹேமன் ஆசாப், கோராகு புத்திரர், பாடகத்தலைவன் எதூதா இப்படி ஆலயத்தில் காலை மாலை ஆராதனைகளில் சங்கீத சபையாரும் 24-வகுப்பாகப் பிரிக்கப்பட்டு தங்கள் முறையின் பாடுவார்கள். சங்கீத சபைகளிலும் காலை ஆராதனை இரண்டாவது பாகத்தில் தமித் தூப காணிக்கை சமயம், பலியிடுகையில் சங்கீத சபை நரம்பு கின்னரத்தோடு பாடுவார்கள். சபையார் ஜெபித்துக் கொண்டிருப்பார்கள் ஆராதனையில் ஐந்தாம் பாகத்தில் ஸ்தோத்திர ஆராதனை சமயம் பிரதான ஆசாரியன் திராக்ஷ ரச பான பலியிடும்போது லேவியின் சங்கீதசபை வாத்தியங்களோடுபாடுவார்கள். முடிவாக அந்த நாளைக்குரிய சங்கீதத்தைப் பாடுவார்கள், சுருங்கச் சொல்லில் சங்கீத சபையார் ஹேமன், ஆசாப், எதூதா என்ற மூன்று குடும்பத்தினர் 24-பிரிவுகளாக முறையே ஆராதனைகளில் பாடுவார்கள், படிப்படியாக பின்காலத்தில் தான் சங்கீதங்கள் மொத்தமாக சேர்க்கப் பட்டன. ஹேமன், ஆசாப், எதூதா இவர்கள் வம்சத்தார் இப்படி சங்கீதங்களையெல்லாம் கோர்வையாக சேர்க்க உதவினவர்கள். பல நூற்றாண்டுகள் படிப்படியாக இயற்றப்பட்டுக் கோர்வையாக சேர்க்கப்பட்டவைகளேயன்றி ஒரே காலத்தில் மொத்தமாக சேர்க்கப்பட்டதல்ல. ஆரம்பத்தில் தாவீதின் சங்கீதங்களே பிரதானம்.

சங்கீதங்களில் சில சிறையிருப்பிலிருந்து யூதர் திரும்பினபின் ஆலயத்தலைவன் ஒருவனால் சேர்க்கப்பட்டவை. ஆதி நூல்களிலிருந்து தான் சேர்க்கப்பட்டவை. இப்போதுதான் கடவுளுக்குறிய பொதுவான

பெயராகிய ஏலோயீம் என்ற பதம் கடவுளுக்கு உபயோகிக்கப்பட்டது, சங்கீதம் 53; 14, 70, 40, 131 7. சங்கீதமெல்லாம் ஒன்றாக சேர்க்கப்பட்டு சங்கீதநூல் பரிபூரணமானது, கி.மு. 2-வது நூற்றாண்டு ஆகிய மக்கபீ காலத்திலேதான்.

## சங்கீதங்களில் நாம் கவனிக்கவேண்டியவை.

**1. கடவுளைப்பற்றிய எண்ணம்;** சில சங்கீதங்களில் கடவுள் இஸ்ரவேலின் குலதெய்வமாக தங்கள் தேசத்திற்குரிய ஆண்டவனாக வருணித்திருக்கிறது, தேவர்களில் இவர் மேலான தேவனைப் போல கூறியிருக்கிறது. ஆனால் நாம் பொதுவாக கவனித்தால் அவர் மகிமையுள்ள சிருஷ்டி கர்த்தாவாக சர்வலோகத்திற்கும் கடவுள் என்றே பார்க்கிறோம். சங்கீதம் 19. எல்லாம் கடந்து சர்வத்திற்கும் மேலான கடவுள் என்றும் மானிடருக்குள் மேலான உன்னத தேவாதி தெய்வமென்றும் பார்க்கிறோம். எனினும் அவர் எப்போதும் மனிதருக்குச் சமீபமாக இருக்கும் "முன்னவன் பின்னவன் முற்றும் நீ சுற்று நீ" என்பவருமே சங்கீதம் 139.

கர்ப்பத்தில் கருவாயிருக்கும் நாள் முதல் மனிதனை தமது தெய்வ சித்தம் நோக்கம் காருண்ணியத்தால் சூழ்கிறவர், 139—15.116. எனினும் கிறிஸ்துவுக்கும் சீஷனுக்குமுள்ள நெருங்கிய சம்பந்தம் போல் அத்தனை தெளிவாக இங்கு இல்லை. சங்கீதங்கள் பக்தன் தன் ஆண்டவன் மேலுள்ள பயபக்தியினால் பொங்கி, பாடிப்போற்றுவதே.

**2, தெய்வ ஆட்சி.** கடவுள் உலக பராமரிப்பு விஷயமாக காட்டும் கிரியைகளை வருணிக்கும்போது சில பிரச்சனைகள் பக்தனின் மனதில் எழும்புகின்றன. இவற்றில் ஒன்று துன்மார்க்கனின் வாழ்வும் நீதிமானின் தாழ்வும், சங்கீதம் 37, 73. சங்கீதம் 37ல் துன்மார்க்கர் அழிவார்கள் என்பதைச் சொல்லிச் சமாதானம் கூறுகிறார். ஆனால் சங்கீதம் 73ல் மகா ஆழ்ந்த கருத்தைக் கவனிக்கிறோம். கடவுளின் பரிசுத்த ஸ்தலத்தில் காத்திருக்கையில் அவர் பிரசன்ன உணர்ச்சியால் வரும் ஆறுதலை இங்கு கூறுகிறார். "உமது ஆலோசனையினால் என்னை நடத்தி முடிவிலே என்னையும் மகிமையில் ஏற்றுக்கொள்வீர்," 73:24, 25.

**3. ஆத்மீக தெய்வ ஆராதனையே.** கடவுளுக்கு ஏற்றது சடங்குகளும் பலிகளுமல்ல; பிரதானம் எவை எவை என கீழ்வரும் சங்கீதங்களில் வாசிக்கிறோம் சங் 51:16 17; சங் 40 : 6-8; 50: 7—15.

**4. மிகுந்த தேசாபிமானம்.** சங்கீதம் 48, 105, 106, இஸ்ரவேலர் தங்கள் கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட மேலான ஜாதி; சீயோனின் மகிமை பெரிது என்பது சங்கீதக்காரர்களின் எண்ணம்.

**5. சத்துருக்கள் பகை,** கடவுள் தங்கள் சொந்தக் கடவுள் புறஜாதியார் விக்கிரக ஆராதனைக்காரர். அறிவீனர் என்ற எண்ணத்தில் ஒரு பெருமை, புற ஜாதியர் மேல் வெறுப்பு, பகையைப் பார்க்கிறோம். சங்கீதம் 94 : 5-7. கடவுளை வணங்காதவர்கள் தம் சத்துருக்கள், கடவுளுக்கும் அவர்கள் சத்துருக்கள் என்ற எண்ணமுண்டு. சங். 60:11,12

சங். 139, 21, 22; புற ஜாதியாரை இகழ்ந்து பகைத்தார்கள், சங்கீதம் 9;3-6, 15, 17, 20, தங்கள் கடவுளைக்குறித்து பெருமை பாராட்டினார்கள். விக்கிரக ஆராதனையையும் விக்கிரக வணக்கத்தையும் வெறுத்தார்கள், சங்கீதம் 115;1,8. சங்கீதம் 137ல் சத்துருக்கள் மேல் பயங்கர வெறுப்பும் கோபமும் பழிவிரும்பும் ஆவியும் காண்கிறோம். 37:9. இந்த மனநிலையை நன்கு விளங்கிக்கொள்ள சில காரியங்களைக் கவனிக்க வேண்டும்.

நமது ஆண்டவர் பாவிகளைச் சிநேகித்தார். சத்துருக்களை சிநேகித்து, அவர்களுக்காக ஜெபித்தார். எனினும் இதினால் அவருக்கு பாவத்தின்மேல் இருந்த வெறுப்பு சற்றேனும் தணியவில்லை. பாவத்தை வெறுத்தார், பாவிகளையோ சிநேகித்தார். தம்மை சிலுவையில் அறைந்தவர்களுக்காக பிதாவிடம் மன்றாடி அவர்களை மீட்கவிரும்பினார். சத்துருவை மித்துருவாக்க அவர் நாடினார், பாவிகளை பாவத்திலிருந்து மீட்கும்படி அவர்களை சிநேகித்து அவர்களுக்காகத் தமது உயிரைக் கொடுத்தார். இந்த மனநிலைதான் கிறிஸ்துவின் அடியாருக்கும் இருக்க வேண்டும். ஆனால் பழைய ஏற்பாட்டில் யூதருடைய மனநிலை இவ்வாறு இருக்கவில்லை. கடவுளை வணங்காமல் பாவஞ் செய்தவர்களையும், அவர்கள் பாவங்களையும் ஒன்றாகச் சேர்த்தே எண்ணினார்கள்.

துன்மார்க்கனை துன்மார்க்கத்திலிருந்து பிரியாமல் சேர்த்து எண்ணுவது நமது மனித இயல்பல்லவோ! கடவுளுடைய அடியாராக அவரைச் சேவித்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள், கடவுளை விரோதித்தவர்களை தங்கள் வெறுப்பிற்கும் பகைக்கும் உரியவர்கள், கடவுளுடைய சாபத்திற்கும் உரியவர்கள் என்றே கருத வேண்டுமென்று சத்துருக்களைக்குறித்து பாடிய சங்கீத கவிராயர்கள் எண்ணினார்கள். மேலும் பாவஞ் செய்கிறவர்கள் இம்மையிலேயே கடவுளால் தண்டிக்கப்பட்டு துன்புறுவார்களென்று யூத பக்தரானஹாசதீம் வகுப்பார் எதிர்பார்த்தார்கள். எனினும் துன்மார்க்கர் கையில் பக்தர்கள் பாடுகளனுபவித்ததை இவர்கள் பார்த்தபோது மனம் தத்தளித்து கலங்கினார்கள். பாவிகள்மேல் இவர்களுக்கு இருந்த வெறுப்பு அவர்கள் பாவத்தின்மேல் அவர்களுக்கிருந்த வெறுப்பிலிருந்தே பிறந்ததென்றே இவர்கள் கருதினார்கள்.

6. மரணத்திற்குப்பின் ஜீவன், பொதுவாகச் சொல்லில் மறுமையின் நித்திய வாழ்க்கை உண்டு என்ற நம்பிக்கை சில சங்கீதத்திலில்லை என்றே சொல்லலாம். உதாரணம் சங்கீதம், 39, 5; சங்கீதம் 6:5;88:5 6.10,11,12.

சிறையிருப்புக் காலத்தின் யூதர்கள் மிகவும் துன்பம் அடைந்த போது. தெய்வபக்தர்களுக்கு இப்பூமியிலே பிரதி பலன் கிடைப்பது அரிதென்பதை அவர்கள் உணர்ந்தார்கள். இதின் மூலமாய் தெளிவு பெற்று மரணத்திற்குப்பின் ஜீவன் உண்டு என்பதை உணர்ந்து சிறை

யிருப்பின் காலத்தில் மரித்தோரின் உயிர்த்தெழுதலைப்பற்றிய நம்பிக்கை யும் யூத பக்தர்களுக்குள் அதிகமாய் பரவிற்று, மறுமையின் வாழ்க்கை யைக்குறித்து நாம் வாசிக்கிற சங்கீதங்கள் மக்கபீயின் காலத்தில் ஏற்பட்டிருக்கலாமென்று சிலர் எண்ணுகிறார்கள். உதாரணம், சங்கீதம் 73:15–26. ''நான்விழிக்கும்போது உமதுசாயலால் திருப்தியாவேன்,'' சங்கீதம் 17:15. இந்த வசனம் நித்திய ஜீவநம்பிக்கையை குறிப்பிடுகிறது யோபு 19:25–27லும் சரீர உயிர்த்தெழுதலைப்பற்றிய வசனங்களைப் பார்க்கிறோம். எனினும் பொதுவாகச் சொல்லின் இந்த நம்பிக்கையை ஒரு ஸ்திரமான போதகமாக யூதர்கள் கையாடவில்லை என்று தோன்றுகிறது.

**7. மேசியாவைப்பற்றிய சங்கீதங்கள்.** சங்கீதம் 2:6, 12; சங் 72 பார்க்கவும். நீதியின் ராஜா, அபிஷேகம் பண்ணப்பட்டவர், என்று மேசியா அழைக்கப்படுகிறார். ''யெகோவாவின் குமாரன்'', சங்கீதம் 2:7ல் இப்பதம் வருகிறது. சங்கீதம் 22 கடவுளின் தாசனைப்பற்றி பேசுகிறது. இதின் முதல் வசனமே ஆண்டவர் சிலுவையில் சொன்ன வார்த்தையுமாகும். சங்கீதம் 110:1 தன்னையே குறித்துப்பேசுவதாக நமது ஆண்டவர் சொல்லுகிறார். அப்போஸ்தலர் 2:26ல் பேதரு. சங்கீதம் 16:8-11 எடுத்து கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அது குறிப்பிடு வதாககூறுகிறார். ஆனால் இது ஆதிநூலாசிரியரின் மூல அர்த்தத்தில் மரணத்திலிருந்து தான் பாதுகாக்கப்படுவதைக்குறித்தே அந்த கவிராயர் கூறுகிறார் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

**8. சங்கீதம் ஒரு பக்தி நூல்:** தனியாக ஒரு பக்தன் கடவுளுக்கும் தனக்குமுள்ள நெருங்கிய சம்பந்தத்தை வெளிப்படுத்துவதுமுண்டு. உ-ம். முதல் பாகத்திலிருக்கும் அநேக சங்கீதங்கள், 42, 43, 55, 55, 56, 57. 103, இப்படி பல உண்டு. பக்தர்கள் ஏகோபித்துப் பாடுவது, போற்றுவது, பிரார்த்தனை செய்வது இப்படிப்பட்ட சங்கீதங்களுமுண்டு உ-ம். சங், 46, 37, 49, 60, 66, 95, 100, 117, 118, 133, 148, 149. 150, இப்படியும் பலவுண்டு. நம்முடைய பக்திக்குரிய வாழ்க்கை நமக்கும் கடவுளுக்குமுரிய தனி சம்பந்தமட்டுமல்ல, நமக்கும் அவருடைய அடியார்களுக்கும் உள்ள சம்மந்தத்தோடும் சேர்ந்ததே, நமது தெய்வவழி பாட்டிலிருக்க வேண்டிய பல காரியங்கள் இங்குண்டு, பாவ அறிக்கை (சங். 51, 130), நன்றிசெலுத்துதல் (சங் 116, 118, 103), தெய்வ அழகில் மகிழ்ந்து புகழ்ந்து மிகப்பணிந்து நமஸ்கரித்து அவரை வாழ்த்துதல் (சங் 8, 23, 24, 84, 93, 34, 45 முதலியன) கடவுள் மேலே அளவற்ற நம்பிக்கை விசுவாசம், தெய்வவழி நடத்துதல் அவர் வேதத்தின் மகிமை இவற்றைக்காட்டும் சங்கீதங்கள் பல, கடவுளுடைய பிரசன்ன உணர்ச்சியில் பரவசமாகி பரமானந்தமடையும் சங்கீதம் (சங் 129), இப்படி எத்தனை எத்தனையோ தத்துவ மாழ்ந்த சங்கீதங்களுண்டு.

கிறிஸ்துவின் அடியார்கள் இருதயம் பொங்கி நன்றி கூறும் வேளையிலும். நோய் துன்பம் மரண வேளையிலும் கடந்த நூற்றாண்டு களில் சங்கீதம் எத்துணை உதவியாக இருந்திருக்கிறது என்பதை நான் விவரிக்கவும் அவசியமோ!

# STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER

**THIRUMARAI AASAN** - MONTHLY; Form IV

| | | |
|---|---|---|
| Place of Publication | : | 2, Manalmedu Street, Erode-638 002. |
| Printers name | : | Vela Printers 3, Mandapam Street, Erode-638 001. |
| Publishers Name & Address | : | Church of Christ 2, Manalmedu Street, Erode-638 002. |
| Editors Name | : | E. Z. Selvanayagam, |
| Nationality | : | Indian |
| Address | : | 2, Manalmedu Street, Erode-638 002. |
| Name and address of individuals who own the newspaper and partners or share-holders holding more than one percent of the total capital | ; | Church of Christ, 2, Manalmedu Street, Erode-638 002. |

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The Voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9 : 00to 9 : 15 P. M.
Fridays-7 : 45 to 8 : 00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker : Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9 : 00 to 9 : 15 P. M.
Thursdays-9 : 00to 9 : 15 P. M.
Fridays-9 : 00 to 9 : 15 P. M.
Sundays-12 : 45 to 1 : 00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker: Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2 : 30 to 2 : 45 P. M.
Tuesdays-2 : 30 to 2 ; 45 P. M.
Thursdays-2 : 30 to 2 : 45 P. M
Fridays-2 : 30 to 2 : 45 P. M.
Saturdays-2 : 30 to 2 : 45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker : P. R. Swamy.
All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5 : 30 to 5 : 45 P. M.
Thursdays-6 : 45 to 7 : 00 P M.
Sundays-6 : 45 to 7 : 00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker : P. K. Varghese
All corespondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala.)
Tuesdays,3 : 45 to 4 : 00 P. M.
Fridays-3 : 45 to 4 : 00 P. M.

ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

# வாசக அன்பர்களுக்கு — — புத்தாண்டு வாழ்த்துக்கள்.

நடந்து முடிந்த திருமறை ஆசான் கருத்தரங்கத்துக்கும், ஆண்டு விழாவுக்கும் வருகை தந்தும், சிறப்புரை யாற்றியும் விழாவினை சிறப்பித்துக் கொடுத்த அனைவருக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

நேரில் வரமுடியாமல் தபால் மூலமாக வாழ்த்துரை வழங்கி உற்சாகப்படுத்தியவர்களுக்கும், வர விரும்பியும் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும்கூட எங்கள் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திருமறை ஆசானின் வளர்ச்சிக்கும், தரத்துக்கும் உங்கள் தொடர்ந்த ஜெபம் தேவை. தயவுசெய்து ஜெபியுங்கள். ஆதரவு தாருங்கள்.

ஆசிரியர்

Edited and Published by E. Z. Selvanayagam and Printed by
Sri. Vela E. V. Arasamanickam, at Vela Printers, Erode-638 001.
Phone : 74878

PRINTED MATTER

BOOK-POST

TO

If undelivered please return to :
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002.